**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ஓ.மு.எண்.1199/ஆ5/2024, நாள்.08.04.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தினகரன் மற்றும் VIT பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் – வெற்றி நமதே என்ற நிகழ்ச்சி 13.04.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறுதல் – அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 10ம் வகுப்பு, 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட தினகரன் அலுவலக மேலாளரின் கடிதம் நாள். 04.04.2024

.....

வேலூர் மாவட்டம், தினகரன் மற்றும் VIT பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் வெற்றி ~~நிச்சயம்~~ நமதே என்ற நிகழ்ச்சியானது 13.04.2024 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை VIT பல்கலைக்கழக அண்ணா அரங்கத்தில் நடைபெறவுள்ளது எனவும், இந்நிகழ்ச்சியில் அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 10ம் வகுப்பு, 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் விருப்பமுள்ள மாணவ / மாணவிகள் கலந்துக்கொள்ளும் பொருட்டு மாணவர்களின் பெற்றோருடன் பாதுகாப்பாக அழைத்துச் சென்று பயன்பெற மாணவர்களுக்கு தெரிவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்.
2. மாணவர்களிடம் எவ்வித கட்டணத் தொகையும் பெறக்கூடாது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அனைத்து அரசு / நிதியுதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
2. மேலாளர்,
   தினகரன் அலுவலகம்,
   24, ஆற்காடு சாலை,
   வேலூர் – 04.